செ.வெ.எண்: 106 நாள்:21.02.2018

## பத்திரிகைச் செய்தி

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் விருப்ப கண்காட்சி

பாளையங்கோட்டை, அரசு அருங்காட்சியகத்தில் வைத்து 21.02.2018 முதல் 27.02.2018 முடிய காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி முடிய நடைபெறுகிறது. இக்கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் கைவினை உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இக்கண்காட்சியில் 20 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு சுமார் 19 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்காட்சியினை 21.02.2018 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர், திரு.சந்தீப் நந்தூரி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். மேலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இணை இயக்குநர் / திட்ட அலுவலர் திருமதி.த.கெட்ஸி லீமா அமலினி, உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்க மேலாளர் கலந்து கொண்டார்கள்.

இக்கண்காட்சியில் கற்றாழை நார் பொருட்கள், பத்தமடை பாய் பொருட்கள், சுடுமண் பொம்மைகள், பனைஓலை பொருட்கள், பர்ஸ் வகைகள், பலகாரங்கள், மரசாமான்கள், அழகு ஆபரணங்கள், சேலைகள், நைட்டி வகைகள், சானிட்டரி நாப்கின், கீசெயின், சணல் பேக், ஊறுகாய், கால்மிதியடி மற்றும் பொம்மை வகைகள் உற்பத்தி செய்யும் விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி